ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1856/41 - 2014 අප්‍රේල් මස 03 වැනි බ්‍රහස්පතින්දා - 2014.04.03
*1856/41 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 03 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் காத்தான்குடி நகர சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

இராஜினாமா செய்ததன் காரணமாக காத்தான்குடி நகர சபையின் உறுப்பினரொருவரின் பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;

முஹம்மதனிபா அப்துல் நசீர் எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த சுயேச்சைக் குழு - 1 இன் தலைவர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்படவேண்டிய அச் சுயேச்சைக் குழுவைச் சேர்ந்தவரும் காத்தான்குடி நகர சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ (2) என்னும் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட சுயேச்சைக் குழு- 1 இன் தலைவர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. சாஹுல் ஹமீது பிர்தௌஸ் என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது காத்தான்குடி நகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் அப்துல் மஜிது மஹம்மது கபீர் ஆகிய நான், 2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தி அமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. சாஹுல் ஹமீது பிர்தௌஸ் என்பவர் காத்தான்குடி நகர சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

ஏ. எம். எம். கபீர்,
தெரிவத்தாட்சி அலுவலர்,
காத்தான்குடி நகர சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
மட்டக்களப்பு,
*2014, பங்குனி 21.*

*4 - 556*